25th January 1972]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கருத்து தெரிவிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இதில் மாநகராட்சி மன்றத்தின் கருத்தை அறியவேண்டும். அவர்களாகப் பார்த்து இதை விட்டுவிட்டால் அதற்குப் பிறகு காட்டிலாகாவுக்கோ, விலங்கினத் துறைக்கோ விட்டு நடத்தச் செய்யலாம். மாநகராட்சியிலிருந்து கருத்து அறிய வேண்டியிருக்கிறது. பிறகுதான் தக்க முடிவை எடுக்கலாம்.

National Commission of UNESCO

* 22. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the help, if any, received from the National Commission of UNESCO for educational reform in the State?

'யுனெஸ்கோ'வின் தேசிய ஆணைக்குழு

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

இம் மாநிலத்தில் கல்விச் சீர்திருத்தத்திற்காக 'யுனெஸ்கோ'வின் தேசிய ஆணைக் குழுவிடமிருந்து உதவி பெற்றிருப்பின் அது யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆரம்பப் பள்ளிகளிலும் நடுத்தரப் பள்ளிகளிலும் அறிவியல் பயிற்சியை வளர்ப்பதற்கு யு.என்.ஐ.சி.ப்-லிருந்து உதவி கிடைத்தது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : தலைவர் அவர்களே, இது யுனெஸ்கோ உதவி பற்றியது. இருந்தாலும் அண்மையில் முதலமைச்சர் அவர்கள் அமெரிக்கா சென்றிருந்தபோது அமெரிக்க நிபுணர்கள் இங்கே கல்விச் சீர்திருத்தத்திற்காக வருகிறார்கள் என்ற செய்தி வந்தது. அதுபற்றி அரசு மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தக் கருத்தின் அடிப்படையில் பரிசீலனை நடந்துகொண்டு வருகிறது. இப்போதைக்கு முடிவாக உதவிகளின் தன்மை அறியப்பட்ட பிறகு, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். யுனெஸ்கோ தந்த வகையில் 50 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவியல் முறையில் பயிற்சி அளிக்க 100 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. நடுநிலைப் பள்ளிகளில் 30 தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு பள்ளிக்கு 3 ஆசிரியர்கள் வீதம் 90 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

Elementary School Teachers

* 23 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether the teachers of the Kanyakumari district have protested about January-February, 1971, to the take over of Elementary Schools by the Panchayat Union; and

(*b*) If so, the reasons therefor and details thereof?